**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகின்றன..

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1) துறை**

**அரசாணை(நிலை) எண். 57** **நாள்: 29.05.2017**

**படிக்கப்பட்டவை.**

1. அரசாணை (நிலை) எண். 79, ஊ.வ.(ம)ஊ. (மாஅதி1) துறை, நாள் 04.07.2016

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.19681/2016/NEDM-2, நாள் 04.04.2017.

––––

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 2016–17–ஆம் ஆண்டுகளுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும், விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. 2017–2018–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக 2017–2018–ஆம் ஆண்டிற்கு ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்டதற்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2017–2018–ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் செயற்குறிப்பினை அனுப்பி, உரிய ஆணை வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது :–

(i) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்திற்காக ரூ.470 கோடி நிர்வாக ஒப்புதல் செய்யப்படுகிறது, அதில் 25% தொகையான ரூ.117.50 கோடி முதற்கட்டமாக விடுவிக்கப்படுகிறது.

(ii) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.